**சியம்பலாண்டுவ பிரதேச சபை**
**மொனராகலை மாவட்டம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2018 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2019 மார்ச் 06 ஆந் திகதி கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் சுருக்கமான அறிக்கை 2019 மே 24 ஆந் திகதியும் விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2019 மே 31 ஆந் திகதியும் தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

எனது அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படைப் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து சியம்பலாண்டுவ பிரதேச சபையின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

**(அ) கணக்கீட்டுக் குறைபாடுகள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு தயாரிக்கப்பட்ட நிதி நிலைமைக் கூற்று தொடர்பான கூற்றில் அரசாங்க வங்கியொன்றில் பேணிச் செல்லப்படுகின்ற சேமிப்புக் கணக்கின் மீதி ரூபா 634,417 தொகை உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. | சரியாக கணக்குகள் தயாரிக்கப்பட வேண்டும். | இந்த மீதி 2018 இன் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப் படாதிருந்ததுடன் 2019 ஆம் ஆண்டு முதல் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்குவதற்காக கணக்குகளை தயாரிக்கும் உத்தியோகத்தருக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. |
| (ii) | தெமட்டபெத்த நீர் செயற்திட்ட இருப்புக் கணக்கில் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறான பேரேட்டின் பிரகாரம் மீதி ரூபா 57,462 ஆக இருந்ததுடன் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று | சரியாக கணக்குகள் தயாரிக்கப்பட வேண்டும். | 2019 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கும் போது சரிசெய்வதற்கு உரிய உத்தியோகத்தருக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. |

| | | | |
|---|---|---|---|
| | தயாரிக்கும் போது அது ரூபா 236,493 ஆக ரூபா 179,031 தொகை அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது. இவ்வாறு கணக்கு வைக்கப்பட்டமையால் கணக்குகள் சமப்படுத்தப்பட்ட முறையும் கணக்காய்விற்கு விளக்கப்பட்டிருக்கவில்லை. | | |
| (iii) | மீளாய்வாண்டிற்காக பேணிச் செல்லப்பட்ட பொதுப் பேரேட்டின் பிரகாரம் நீர்ச் சேவைகளுக்கான மூலதனச் செலவினம் ரூபா 1,278,688 ஆக இருந்த போதிலும், நிதிசார் செயற்பாட்டுக் கூற்றில் அப்பெறுமதி ரூபா 1,163,867 ஆக ரூபா 114,821 தொகை குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது. | சரியாக கணக்குகள் தயாரிக்கப்பட வேண்டும். | குறிப்பின் மூலம் சீராக்கிக் கொள்வதற்கு உரிய உத்தியோகத்தருக்கு ஆலோசனை வழங்கப்படும். |
| (iv) | மீளாய்வாண்டிற்காக பேணிச் செல்லப்பட்ட பொதுப் பேரேட்டின் பிரகாரம் நீர்ச் சேவை மூலதனச் சொத்துக்களை பழுதுபார்த்தல் மற்றும் பராமரிப்புச் செலவினம் ரூபா 108,632 ஆக இருந்த போதிலும், நிதிசார் செயற்பாடுகள் கூற்றில் அது ரூபா 47,422 ஆக ரூபா 61,210 தொகை குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது. | சரியாக கணக்குகள் தயாரிக்கப்பட வேண்டும். | குறிப்பின் மூலம் சீராக்கிக் கொள்வதற்கு உரிய உத்தியோகத்தருக்கு ஆலோசனை வழங்கப்படும். |
| (v) | பிரதேச சபைக்குரிய ரூபா 1,100,000 தொகையான பெறுமதிக்கு மதிப்பீடு செய்யப்பட்ட 03 காணிகள் மற்றும் மதிப்பீடு செய்யப்படாத 47 மயான நிலங்கள் என்பன நிதி நிலைமைக் கூற்றில் காண்பிக்கப்படவில்லை. | சரியாக கணக்குகள் தயாரிக்கப்பட வேண்டும். | நிதி நிலைமைக் கூற்றில் உள்ளடக்குவதற்கு கைதவறவிடப்பட்டு தற்காலிகமாக மதிப்பீடு செய்யப்பட்ட 03 காணிகள் மற்றும் மதிப்பீடு செய்யப்படாத 47 மயான நிலங்கள் தொடர்பாக தற்காலிக மதிப்பீட்டைப் பெற்று நிலையான சொத்துப் பேரேட்டில் உள்ளடக்குவதற்கு உரிய உத்தியோகத்தருக்கு ஆலோசனை வழங்கப்படும். |

**(ஆ) இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| மீளாய்வாண்டிற்காக சமர்ப்பிக்கப்பட்ட நிதி நிலைமைக் கூற்றில் காண்பிக்கப்படுகின்ற வேலைக் கடன்பட்டோர் மற்றும் முத்திரைக் கட்டண மீதிகளுக்கும், உரிய பதிவேடுகளில் காணப்படுகின்ற மீதிகளுக்கும் இடையே ரூபா 268,380 தொகையான வேறுபாடு காணப்பட்டது. | இணங்காமை களுக்குரிய காரணங்களைக் கண்டறிந்து சரிசெய்யப்பட வேண்டும். | உரிய வேறுபாடுகளை சரிசெய்து பதிவேடுகளைப் பேணிச் செல்வதற்கு உத்தியோகத்தர்களுக்கு ஆலோசனை வழங்கப்படும். |

**(இ) கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| ரூபா 5,057,253 தொகையான பொது வைப்பு மீதிக்குரிய நாளதுவரையாக்கப்பட்ட பொது வைப்புப் பதிவேடு சமர்ப்பிக்கப்படாமை. | கணக்கு மீதிகளை உறுதிப்படுத்துகின்ற சான்றுகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். | பொது வைப்புப் பதிவேட்டை நாளதுவரையாக்குவதற்கு விடயப் பொறுப்பு உத்தியோகத்தருக்கு ஆலோசனை வழங்கப்படும். |

## 1.4 இணங்காமைகள்

**சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை**

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- | --- |
| (அ) 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச் சட்டம் | | | |
| (i) 126(vii)(ஏ) | உப விதி விதித்து மோட்டார் வாகனங்களை நிறுத்தி வைக்கும் | அதிகாரச் சட்டத்தின் ஏற்பாடுகளின் | சபை அதிகாரப் பிரதேசத்தில் உள்ள மோட்டார் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | இடங்களிலிருந்து கட்டணம் அறவிடப்பட்டிருக்க வில்லை | பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | வாகனங்களை தரித்து வைக்கின்ற இடங்களை இனங்கண்டு 2019 யூலை 31 ஆந் திகதிக்கு முன்னர் முன்னர் வருடாந்த கட்டணம் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |
| (ii) | 126(vii)(ஊ) ஆம் பிரிவு | சபை அதிகாரப் பிரதேசத்தில் காட்சிப்படுத்தப்பட்ட நிலையான விளம்பர அறிவித்தல் பதாதை தொடர்பாக மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை. | அதிகாரச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | 2019 யூன் 30 ஆந் திகதி வரையிலும் சபை அதிகாரப் பிரதேசத்தில் நிர்மாணிக்கப்பட்டுள்ள நிலையான வியாபார விளம்பர அறிவித்தல் பதாதை தொடர்பான அறிக்கையொன்றைப் பெற்று அதற்குரிய கட்டணத்தை அறவிடுவதற்குத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும். |
| (iii) | 147(i) ஆம் பிரிவு | இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபையில் பதிவு செய்துள்ள அல்லது அந்த சபையில் அங்கீகரிக்கப்பட்டுள்ள சபை அதிகாரப் பிரதேசத்தில் காணப்படுகின்ற ஹோட்டல் மற்றும் தங்குமிடங்கள் தொடர்பாக மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை. | அதிகாரச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபையில் பதிவு செய்துள்ள ஹோட்டல், சிற்றுண்டிச் சாலை அல்லது தங்குமிடங்கள் தொடர்பாக விரைவாக மெய்மையாய்வொன்று மேற்கொண்டு 2019 யூன் 30 ஆந் திகதிக்கு முன்னர் உரிய கட்டணத்தை அறவிடுவதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும். |
| (ஆ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக்கோவையின் XXIV ஆம் அத்தியாயத்தின் 4 | 2004 ஆம் ஆண்டிற்கு முன்பிருந்தும் 2005 ஆம் ஆண்டிலிருந்தும் கொண்டுவரப்படுகின்ற முறையே ரூபா 2,034 மற்றும் ரூபா 31,255 தொகையான ஊழியர் | நிலுவை ஊழியர் கடனை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | நிலுவை கடன் மீதி காணப்படுகின்ற ஊழியர்களில் இதுவரையிலும் மரணமடைந்திருந்தனர் என வெளிப்படுத்தப் பட்டிருந்தது. |

| | | | | |
|---|---|---|---|---|
| | ஆம் பிரிவு | கடன் அறவிடப்படவில்லை. | | அவர்களுக்காக சபையில் பேணிச் செல்லப்படுகின்ற கடன் கோவைகளுக்குரிய பிணைகாரர்களும் கண்டறியப்படவில்லை. அதனால் இந்தக் கடன் நிலுவையை அறவிடும் போது அக்காலத்தில் சேவையில் இருந்த உத்தியோகத்தர்களிடமிருந்த அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |
| (இ) | 2016 திசெம்பர் 29 ஆந் திகதிய 30/2016 ஆம் இலக்க அரச நிர்வாகச் சுற்றறிக்கை | சபைக்குச் சொந்தமான 04 வாகனங்கள் தொடர்பாக எரிபொருள் எரிவு பரீட்சிக்கப்பட்டிருக்க வில்லை. | சுற்றறிக்கையின் அறிவுரையின் பிரகாரம் எரிபொருள் எரிவு பரீட்சிக்கப்பட வேண்டும். | இந்த வாகனங்கள் இயந்திரத் தொகுதியின் கீழ் வருவதுடன் இதற்காக எரிபொருள் பரிசோதனை செய்வதற்கு இயந்திரப் பொறியியலாளருக்கு அனுப்பப்பட்டுள்ளது. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2018 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 3,571,368 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 7,577,611 ஆக இருந்தது.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரியதாகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | | 2018 | | | | 2017 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | வருமானம் | மதிப்பிடப்பட்ட வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை | மதிப்பிடப்பட்ட வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | வீதவரியும் வரியும் | 2,000 | - | - | - | 2,000 | - | - | - |
| (ii) | வாடகை | 15,145,147 | 9,737,317 | 9,851,573 | 38,169 | 15,332,710 | 9,668,760 | 9,685,385 | 118,775 |
| (iii) | அனுமதிப்பத்திரக் | 1,613,000 | - | 1,793,370 | - | 1,563,000 | - | 1,436,630 | - |

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | கட்டணங்கள் | | | | | | | | |
| (iv) | ஏனைய வருமானம் | 9,394,000 | 6,054,351 | 9,562,142 | 2,616,201 | 6,675,800 | 5,628,125 | 4,956,925 | 2,829,763 |
| | மொத்தம் | 26,154,147 | 15,791,668 | 21,207,085 | 2,654,370 | 23,573,510 | 15,296,885 | 16,078,940 | 2,948,538 |

### 2.2.2 வருமான சேகரித்தலின் செயலாற்றல்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டில் சிட்டையிடப்பட்ட ரூபா 15,791,668 தொகையான மொத்த வருமானத்தில் ஆண்டின் இறுதி வரையிலும் ரூபா 2,654,370 தொகை அதாவது 17 சதவீதம் அறவிடப்படவில்லை. | நிலுவை வருமானம் அறவிடப்பட வேண்டும். | மீளாய்வாண்டிற்குரிய நிலுவை வருமானத்தில் ஒரு பகுதி இதுவரையிலும் அறவிடப்பட்டிருந்ததுடன் நிலுவையாக இருந்த முத்திரைக் கட்டணத்தை அறவிடுவதற்குரிய கடிதம் தயாரிக்கப்பட்டு 2018 யூலை 19 ஆந் திகதி மாகாண இறைவரித் திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது. |

### 2.2.3 வீதவரியும் வரியும்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 134(1) ஆம் பிரிவின் பிரகாரம் அபிவிருத்தி செய்யப்பட்ட பிரதேசங்களை இனங்கண்டு ஆதனவரி அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | அபிவிருத்தியடைந்த பிரதேசங்கள் முன்னரே இனங்காணப்பட்டு உரிய வழிமுறைகளைப் பின்பற்றி ஆதனவரி அறவிடப்பட வேண்டும். | சபை அதிகாரப் பிரதேசத்தில் ஆதனவரி அறவிடக்கூடிய பிரதேசமாக சியம்பலாண்டுவ, எத்திமலே, தெம்பகஹவெல போன்ற சிறிய நகரங்கள் இனங்காணப்பட்டு ஆதனவரி அறவிடுவதற்குரிய ஆரம்ப செயற்பாடுகளை ஆரம்பிப்பதற்கு உத்தியோகத்தர்களுக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. |

### 2.2.4 வாகனங்களை வாடகைக்கு விடல்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபைக்குரிய பெகோ லோடர் மற்றும் மோட்டார் கிறேடர் இயந்திரம் என்பவற்றை வாடகைக்கு | நிலுவை வருமானம் அறவிடப்பட | இதுவரையிலும் நிலுவைப் பணத்தை சேகரிப்பதற்கு நடவடிக்கை |

| | | |
|---|---|---|
| வழங்கியதால் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவிட வேண்டியிருந்த ரூபா 304,325 தொகை அறவிடப்பட்டிருக்கவில்லை. | வேண்டும். | எடுக்கப்பட்டதுடன் 2019 மே 17 ஆந் திகதி வரையிலும் ரூபா 25,050 தொகை அறவிடப்பட்டுள்ளது. |

**2.2.5 நீர்க் கட்டண வருமானம் சேகரித்தல்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிலுவை நீர்க்கட்டண வருமானம் ரூபா 75,419 ஆக இருந்தது. | நிலுவை நீர்க்கட்டணம் அறவிடப்பட வேண்டும். | 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிலுவையாக இருந்த நீர்க்கட்டணம் ரூபா 75,419 இலிருந்து 2019 ஏப்ரல் 30 ஆந் திகதி வரையில் ரூபா 63,191 தொகை அறவிடப்பட்டதுடன் நிலுவை பணத்தை அறவிடுவதற்காக தேவையான நிலுவை அறிவித்தல் அனுப்பப்பட்டுள்ளது. |

**2.2.6 நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக்கட்டணம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவிடப்பட வேண்டியதாக காணப்பட்ட நிலுவை நீதிமன்றத் தண்டப்பணம் ரூபா 137,978 தொகை மற்றும் நிலுவை முத்திரைக் கட்டணம் ரூபா 5,351,017 தொகை என்பன அறவிடப்பட்டிருக்கவில்லை. | நிலுவை நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம் என்பன அறவிடப்பட வேண்டும். | 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவிட வேண்டிய ரூபா 137,978 தேவையான நீதிமன்றத் தண்டப்பணத்தில் ரூபா 121,083 தொகையொன்று 2019 பெப்ரவரி 25 ஆந் திகதிய 3616 ஆம் இலக்க பற்றுச்சீட்டு மூலம் அறவிடப்பட்டுள்ளது. நிலுவையாக இருந்த முத்திரைக் கட்டணத்தை அறவிடுவதற்குரிய கடிதங்கள் தயாரிக்கப்பட்டு மாகாண இறைவரித் திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது. |

**2.3 மிகைக் கட்டணம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் பொறுப்பு | நிலுவை மிகைக் கட்டணம் | இந்த நிலுவையில் ஒரு பகுதி இதுவரையிலும் |

| | | |
|---|---|---|
| வாய்ந்தவர்களுக்கு எதிராக என்னால் முன்னைய ஆண்டின் போது விதிக்கப்பட்ட மிகைக் கட்டணம் தொடர்பாக மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவிட வேண்டிய தொகை ரூபா 220,017 ஆகும். | அறவிடப்பட வேண்டும். | அறவிடப்பட்டிருந்ததுடன் மிகுதி மிகைக் கட்டணப் பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 செயலாற்றல்**

பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 3 ஆவது பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் நிர்வகித்தல், பொதுமக்களின் பொழுதுபோக்கு வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

**(அ) செயல்நடவடிக்கைத் திட்டம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டிற்காக செயல்நடவடிக்கைத் திட்டமொன்று தயாரிக்கப்படவில்லை. | 2019 ஆம் ஆண்டிற்காக செயல் நடவடிக்கைத் திட்டமொன்று தயாரிக்கப்பட வேண்டும். | 2018 ஆம் ஆண்டின் செயல்நடவடிக்கைத் திட்டம் பூர்த்தி செய்யப்படாதிருந்ததுடன் 2019 ஆம் ஆண்டிற்குரிய செயல் நடவடிக்கைத் திட்டத்தைத் தயாரிப்பதற்கு விடயப் பொறுப்பு உத்தியோகத்தருக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. |

**(ஆ) நிலைபேறான அபிவிருத்தி இலக்கு**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| ஐக்கிய நாடுகளின் ‘‘நிலைபேறான அபிவிருத்தி நிகழ்ச்சி நிரல் - 2030’’ தொடர்பாக சபை அறிந்திருந்த போதிலும், சபைக்குரியதாக முடியமான வகையில் இனங்காணப்பட்ட நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள் மற்றும் இலக்குகளை அளவிடுவதற்கான குறிகாட்டிகள் இனங்காணப்பட்டிருக்கவில்லை. | நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள் மற்றும் இலக்குகளை அளவிடுவதற்கு குறிகாட்டிகளை இனங்கண்டு அதன் பிரகாரம் வருடாந்த இலக்கு அடைதலின் முன்னேற்றம் அளவிடப்பட வேண்டும். | நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள் மற்றும் நோக்கங்களை அளவிடுவதற்காக 2020 ஆம் ஆண்டு முதல் வருடாந்த பாதீட்டின் மூலம் வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம் மற்றும் பெறுகைத் திட்டங்களின் மூலம் உரிய குறிகாட்டிகள் இணங்காணப்பட்டு உரிய |

| | | |
|---|---|---|
| | | உத்தியோகத்தர்களுக்கு அறிவித்து விரைவாக தேவையான நடவடிக்கைகள் அமுல்படுத்தப்படும். |

### 3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) 2017 யூன் 05 ஆந் திகதி பிரதேச சபைக்கு கையளிக்கப்பட்ட சியம்பலாண்டுவ வாராந்த சந்தையின் 10 கடைகள் மீளாய்வாண்டின் இறுதிவரையிலும் வாடகைக்கு வழங்கப்படவில்லை. | கடைகளை வாடகைக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | இந்த கடைகளுக்காக மக்களின் கோரிக்கை மந்த நிலையில் காணப்படுகின்றமை இனங்காணப்பட்டதுடன் அதன் பிரகாரம் எடுக்கப்பட்ட சபைத் தீர்மானத்தின் அடிப்படையில் மதிப்பீட்டுத் தொகையில் 10 சதவீதத்திற்கு குறையும் போது ஆகக் குறைந்த கேள்வியை மீண்டும் பெறுகை செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |
| (ஆ) சபைக்குச் சொந்தமாக இருந்த அகற்றப்பட்ட 42 பழைய கடைகளில் இருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 115,850 தொகை மீளாய்வாண்டின் இறுதிவரையிலும் அறவிடப்பட்டிருக்கவில்லை. | நிலுவை கடை வாடகை விரைவாக அறவிடப்பட வேண்டும். | ஒவ்வொரு கடை உரிமையாளர்களும் நிலுவை வாடகையைச் செலுத்தாதுவிடின் சட்டரீதியான நடவடிக்கை எடுப்பதற்கு கடிதம் மூலம் அறிவிக்கப்பட்டிருந்ததுடன் அப்பணத்தை அறவிடுவதற்காக நினைவூட்டல் கடிதமும் விரைவில் அனுப்பப்படும். |
| (இ) 2015 யூலை 10 ஆந் திகதிய 02/2015 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் 04 ஆம் பந்தியின் பிரகாரம் பயன்பாட்டிற்கு எடுக்கப்படாத சொத்துக்கள் 2015 ஒக்தோபர் 10 ஆந் திகதிக்கு முன்னர் விற்றுத் தீர்க்கப்பட வேண்டிய போதிலும் பிரதேச சபைக்குரிய | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | ஆதனங்களை ஏலத்தில் விற்பனை செய்வதற்காக மாகாண இயந்திர பணிப்பாளரால் கேள்வி கோரப்பட்டுள்ளது. |

| | | | |
|---|---|---|---|
| | 2012 ஆம் ஆண்டு முதல் பயன்பாட்டிற்கு எடுக்கப்படாத 03 உழவு இயந்திரங்கள் மற்றும் 03 இழுவைப் பெட்டிகள் தொடர்பாக மேற்கூறப்பட்ட சுற்றறிக்கைகளின் அறிவுரையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | | |
| (ஈ) | சபை அதிகாரப் பிரசேதத்தில் நடாத்திச் செல்லப்படுகின்ற சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரம் பெறவேண்டிய 123 தொழில்முயற்சிகளுக்காக உரிய நடவடிக்கை எடுத்து சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்டிருக்கவில்லை. | இந்த தொழில் முயற்சிகளைப் பரீட்சித்து குறித்த கட்டணத்தை அறவிட்டு சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப் பத்திரம் வழங்கப்பட வேண்டும். | இந்த தொழில் முயற்சிகளில் அனேகமானவை இதுவரையிலும் செயற்படு நிலையில் காணப்படாதிருந்ததுடன் ஏனைய வியாபாரங்களுக்குரிய அனுமதிப்பத்திரத்தை வழங்குவதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுப்பதற்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. |

**3.3 மனிதவள முகாமைத்துவம்**

**பதவியணியினர் வெற்றிடங்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு அங்கீகரிக்கப்பட்ட பதவியணிகளின் பிரகாரம் சபையில் 05 பதவிக்குரிய 07 ஊழியர் வெற்றிடங்கள் காணப்பட்டன. | பதவியணியினர் வெற்றிடங்கள் நிரப்பப்பட வேண்டும். | இந்த வெற்றிடங்களை நிரப்புமாறு உள்ளூராட்சி ஆணையாளருக்கு கோரிக்கை விடப்பட்டுள்ளது. |

## 3.4 சொத்துக்கள் முகாமைத்துவம்

### 3.4.1 வாகனங்களின் உரித்து கையேற்கப்படாமை

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| சபையில் பயன்படுத்துகின்ற 02 வாகனங்களின் சட்டரீதியான உரித்து சபைக்கு கையேற்கப்படவில்லை. | சபைக்குரிய வாகனங்களின் உரித்தை கையேற்க வேண்டும். | வாகனங்களை கையேற்பதற்காக தேவையான ஆவணங்கள் தற்போது சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. |

### 3.4.2 குறித்த திகதியில் வருமான அனுமதிப்பத்திரம் பெறப்படாமையினால் தண்டப்பணம் செலுத்துதல்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| சபைக்குரிய 10 வாகனங்களுக்குரிய வருமான அனுமதிப்பத்திரம் குறித்த திகதியில் பெற்றுக்கொள்ளபடாமையினால் ரூபா 23,155 தொகையான தண்டப்பணம் செலுத்தப்பட்டிருந்தது. | பொறுப்புவாய்ந்த உத்தியோகத்தர்களிடமிருந்து உரிய தண்டப்பணம் அறவிடப்பட வேண்டும். | பிரதேச சபைக்காக கட்டணமற்ற வருமான அனுமதிப்பத்திரம் விநியோகிக்கப்படுகின்றது. பின்னர் வருமான அனுமதிப்பத்திரத்திற்காக கட்டணம் செலுத்துமாறு பிரதேச செயலகத்தினால் அறிவிக்கப்பட்டதுடன் இதன் காரணமாக தண்டப்பணம் செலுத்த வேண்டி ஏற்பட்டிருந்தது. |

## 3.5 பெறுகைகள்

### பெறுகைத் திட்டம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| சபையினால் மீளாய்வாண்டிற்கான பெறுகைத் திட்டமொன்று தயாரிக்கப்படவில்லை. | அங்கீகரிக்கப்பட்ட பாதீட்டிற்கு இணங்க பெறுகைத் திட்டம் தயாரிக்கப்பட வேண்டும். | 2018 ஆம் ஆண்டு வரையும் பெறுகைத் திட்டமொன்று தயாரிக்கப்படாதிருந்ததுடன் 2019 ஆம் ஆண்டிற்காக தயாரிக்கப்பட்டுள்ளது. |

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| மீளாய்வாண்டின் பாதீட்டின் பிரகாரம் மதிப்பீடு செய்யப்பட்ட வருமானத்துடனும் செலவினத்துடனும் ஆண்டின் உள்ளபடியான வருமானத்தையும் செலவினத்தையும் ஒப்பீடு செய்த போது 08 வருமான விடயங்களில் 14 சதவீதம் முதல் 110 சதவீதம் வரையும், 08 செலவின விடயங்களில் 08 சதவீதம் முதல் 98 சதவீதம் வரையும் முரண்கள் காணப்பட்டன. | சரியான பாதீடொன்றைத் தயாரித்து அதில் காண்பிக்கப்பட்டுள்ள இலக்குகளை அடைய வேண்டும். | எதிர்வரும் வருடங்களின் போது இவ்வாறான முரண்களைக் குறைக்கும் வகையில் வருமானம் மற்றும் செலவினங்கள் தொடர்பாக சரியான கவனமொன்றைச் செலுத்தி பாதீட்டுக் கட்டுப்பாட்டிற்குத் தேவையான நடவடிக்கைகள் வழங்கப்படும். |

### 4.2 உள்ளகக் கணக்காய்வு

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| மீளாய்வாண்டிற்காக உள்ளகக் கணக்காய்வொன்று மேற்கொள்ளப் பட்டிருக்கவில்லை. | உள்ளகக் கணக்காய்வு நடவடிக்கைகள் செய்யப்படல் வேண்டும். | 2019 ஆம் ஆண்டின் இறுதிக் காலாண்டு 02 இல் உள்ளகக் கணக்காய்வு அலகொன்று தாபிக்கப்பட்டு அதன் நடவடிக்கைகளை முறைமைப்படுத்துவதற்கு ஊழியர்களுக்கு ஆலோசனை வழங்கப்படும். |

## 4.3 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| முகாமைத்துவ கணக்காய்வுத் திணைக்களத்தின் 2009 யூன் 09 ஆந் திகதிய டீஎம்ஏ/2009(01) ஆம் இலக்க உள்ளகக் கணக்காய்வு வழிகாட்டி தொடர்பான சுற்றறிக்கையின் பிரகாரம் மீளாய்வாண்டிற்காக கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு தாபிக்கப்பட்டிருக்கவில்லை. | கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவொன்றை தாபித்தல் வேண்டும். | 2019 ஆம் ஆண்டின் இறுதிக் காலாண்டு 02 இல் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு தாபிக்கப்பட்டு நடாத்திச் செல்வதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது. |